டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை வட்டமாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரும்பவும் சொல்லுங்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை வட்டமாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்றால் அங்கு 32 வருவாய்க் கிராமங்கள் உள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இங்கு அறிவித்துள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஏற்கெனவே அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அவசியம் கருதி, அதன் முக்கியத்துவம் கருதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஏ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டையும் பிரித்து கல்லிமந்தையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், 35 ஊராட்சிகளைக் கொண்டு பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கின்றது. ஓர் ஊராட்சி ஒன்றிய எல்லையிலிருந்து மற்றோர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குச் செல்ல வேண்டும் என்றால், சுமார் 85 கி.மீ. தொலைவிற்குச் செல்ல வேண்டும். மேலும், 2006 ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் மற்றும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலோடு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் நிருவாக நலன் கருதி, கள்ளிமந்தையம் ஒன்றியத்தை புதிதாகப் பிரித்தால், மத்திய அரசின் நிதி அதிகமாக வரும். எனவே, அதனைப் பிரித்துத் தருவதற்கும், அதுபோல், உத்திரமேரூரில் 73 ஊராட்சிகள் உள்ளன. அதனையும் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிருவாக நலன் கருதி, நாகர்கோவில், ஓசூர், ஆவடி போன்ற நகராட்சிகளை மாநகராட்சியாக தரம் உயர்த்தியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, சுருக்கமாகக் கேட்டீர்கள் என்றால்தான் இன்னொரு உறுப்பினருக்கு நான் வாய்ப்பு தர முடியும்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாக நலன் கருதி, பொதுமக்களுடைய நலன் கருதி பெரிய ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. சக்கரபாணி, நீங்களே இப்படிச் செய்தீர்கள் என்றால், உங்கள் உறுப்பினர் ஒருவருக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு போகும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூன்று மாநகராட்சிகளை தரம் உயர்த்தியுள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசியபோது, பெரிய ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் பிரிக்க வேண்டும் என்ற நல்ல கருத்தினைத் தெரிவித்தார்கள். இதற்கு விதிமுறைகள் உள்ளன என்பது அவர்களுக்குத் தெரியும். ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்து அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 16—3—2007—ல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்போர் சங்கத்தினர் அடங்கிய கருத்துக் கேட்புக் கூட்டங்களைக் கூட்டி, ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் பரிந்துரையின்படி அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கருத்துருக்கள் அனுப்பிவிட்டதாகத் தெரிவித்தார்கள். இதுபோன்ற கருத்துருக்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை. இதற்கு முன்புகூட கேள்வி கேட்டிருந்தீர்கள்; இதுவரையிலும் வரவில்லை. தொப்பம்பட்டி ஊராட்சியைப் பொறுத்தவரையில், 38 கிராம ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. 17 கிராம ஊராட்சிகள் கள்ளிமந்தைக்கு அருகில் உள்ளன. ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 35 கிராம ஊராட்சிகளில் கே கீரனூர், சின்னக்காம்பட்டி, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, குத்திலுப்பை, ஓடைப்பட்டி, ஐ வாடிப்பட்டி, மண்டவாடி, அம்பிளிக்கை மற்றும் சிந்தலப்பட்டி ஆகிய பத்து கிராம ஊராட்சிகளில் உள்ள கிராமப் பொதுமக்கள் புதிதாக உருவாக்கக் கோரியுள்ள கள்ளிமந்தையம் ஊராட்சி ஒன்றியத்தில் தங்கள் கிராம ஊராட்சியைச் சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு, தொடர்ந்து ஒட்டன்சத்திரம் ஊராட்சியில் செயல்பட வேண்டும் என்ற ஒரு கருத்தினைச் சொல்லியிருப்பதோடு, திரும்பவும் அந்தக் கருத்தினை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், நமது எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், அந்தப் பிரச்சினையைப் பேசி சரி செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். அப்படி அந்தக் கருத்துரு சரியாக அனுப்பப்படுகின்றபட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முழுமையான கருத்துரு வரக்கூடிய*

2019 ஜூலை 20] *[திரு. எஸ்.பி. வேலுமணி]*

சூழ்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக அது பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

(ஐ) வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்* **V.P.B.** *பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறப்புச் சான்றிதழ் என்பது கிராமப்புறங்களில் இருக்கின்ற பொதுமக்களுக்கு வருவாய்த் துறை சார்ந்த முக்கியமான தேவையாக இருக்கிறது. மருத்துவமனையிலே இறப்பு ஏற்பட்டால், மருத்துவ அலுவலரால்* Form 4A *கொடுக்கப்பட்டு, அதிலிருக்கும்* cause of death*–ஐ வைத்து கிராம நிருவாக அலுவலர், உடனடியாக அந்த* certificate *கொடுத்துவிடுகிறார். ஆனால், மருத்துவமனை அல்லாது, வீடுகளில் ஏற்படுகின்ற இறப்புகளுக்கு பொதுமக்கள் கிராம நிருவாக அலுவலரிடம் சென்று இறப்புச் சான்றிதழ் கேட்கின்றபொழுது, அவர் மீண்டும் அந்தச் மருத்துவரிடமிருந்து* Form 4A *வந்தால்தான் அந்தச் சான்றிதழைக் கொடுக்க இயலும் என்று சொல்வதால், பொதுமக்கள் மருத்துவரிடம் சென்று அலைகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, வீடுகளில் ஏற்படுகிற இறப்புகளைப் பொறுத்தவரையில், கிராம நிருவாக அலுவலர்களே நேரடியாகச் சென்று பார்வையிட்டு* cause of death*–ஐ விசாரித்து, அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினால், பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் குறையும். இது குறித்து பேரவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.*

(ஒ) ஒரத்தநாடு தொகுதி, இனாத்துக்கான்பட்டி விமானதளம், குடியிருப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒரத்தநாடு தொகுதியில் இந்திய துணைக் கண்டத்தின் பெரிய விமான தளம் அமைந்திருக்கிறது.*